# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 87/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-8/PW- 8 | Village: | |
| Name | : கண்ணுசாமி, சிறப்பு | Age | : |
| உதவி ஆய்வாளர், ஓய்வு | | Taluk | : |
| Father's/Husband's Name | : | | |
| | | Religion | : |
| Nationality | : Indian | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 27/01/2023**

சாட்சியை திருப்பனந்தாள் காவலர் திருமதி. டென்னிஷா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று திருவிடைமருதூரில் வசித்து வருகிறேன். நான் கடந்த 17-03-2011 ம் தேதி திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது குமரங்குடி கிராமத்தை சேர்ந்த வீரையன் மகன் ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலைய குற்ற எண்.63/2011 ல் சட்டபிரிவுகள் 294(பி), 341, 323, 324, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்டு 17/03/2011 ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மகாலிங்கம் மற்றும் காசிலிங்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்

மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) பின்னர் பட்டியல் சாட்சிகள் ரமேஷ், சேகர், நாகலிங்கம், பீமன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் 17/03/2011 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் சோழபுரம் மீன் மார்கெட் எதிரில் நின்று கொண்டிருந்த எதிரிகள் பாஸ்கர், பாக்கியராஜ், இராமசந்திரன் ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து உரிய நடைமுறைக்குப்பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் 02/02/2012 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் கடம்பங்குடி பனந்தோப்பு அருகே நின்று கொண்டிருந்த எதிரி சுகுமார் என்பவரை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து உரிய நடைமுறைக்குப்பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மங்கை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ.சா.1 க்கான விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று பெற்று வந்தேன். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு 1 மற்றும் 3 வது எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(பி), 341, 323, 506(2) இதச வின் படியும் , 2 வது எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(பி), 341, 324, 506(2) இதச வின் படியும், 4 வது எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(பி), 341, 506(2) இதச வின் படியும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

புகார் வாக்குமூலத்தில் சம்பவம் நடந்தாக சொல்லப்படும் நேரம் ஒரு அம்புகுறியிட்டு கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 12 ல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் கூடுதலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல்

அறிக்கையில் நிகழ்நிலை புகார்தாரரின் முகவரி குமரங்குடி, கொண்டசமுத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சோழபுரம் பகுதியில் கொண்டசமுத்திரம் என்ற கிராமம் இல்லை என்றால் சரிதான். சாட்சி சேகர் என்பவரை இறந்து போன எதிரி சுகுமார் மற்றும் பாக்கியராஜ் ஆகியோர் வெட்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர்களுக்குள் முன்விரோதம் இருந்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 22.00 மணி என்பது இரவு 10.00 மணியை குறிக்கும் என்றால் சரிதான். மாதிரி வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ராமு என்பவரை நான் இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சான்று பொருட்கள் எ்துவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும், இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து , எதிரிகளுக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**